ஆத்தூர் கிராமத்திற்குப் பாசன வசதி

* 95 வினா—திரு. தாழை மு. கருணாநிதி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் ஒன்றியம், ஆத்தூர் கிராமத்தில் உள்ள நன்செய் நிலங்களுக்கு வடிகால் வசதி செய்து கொடுப்பதற்கான திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) தலைப் பொறியாளர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, அதற்கான நடவடிக்கை எப்போது மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஆய்வு வேலை முடிந்தவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விக்கிரமன் ஆற்றின் கரைகள்

* 96 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம ஒன்றியம், திருமங்கலத்தில் விக்கிரமன் ஆற்றின் கரையைப் பலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விக்ரமனாற்றின் கரையை 6 ஆவது மைல் முதல் 7/1 மைல் வரை வலுப்படுத்தும்பொருட்டு ரூ. 17,200 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பெற்ற வேலை தற்சமயம் முடிவுறும் தருவாயில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாயூரம் ஒன்றியத்தில் திருமங்கலத்தில் மாப்படுகை-கலங்குடி பகுதியில் விக்கிரமன் ஆற்றின் கரை மிகுந்த சேதம் ஏற்பட்டு, அடிக்கடி பொது மக்களுக்கு இடையூறு ஏற்பட்டு வருகிறது. **அமைச்சரவர்கள்**

1975 அக்டோபர் 30]

குறிப்பிடுவது அந்த இடமாக இருக்காது என்று கருதுகிறேன் எனவே, அந்த இடத்தில் ஆற்றின் கரையைப் பலப்படுத்தி, இடையூறுகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்குத்தான் பதில் தயாரித்திருக்கிருர்கள். வேறு தகவல் ஏதாவது இருந்தால், அதைத் தெரிவித்தால் அரசாங்கம் அதன்மீது நடவடிக்கை எடுக்கும்.

நாட்டறம்பள்ளி துணை வட்டம்

* 133 வினு—திரு. ஜி. ராமசாமி:

திரு. டி. சி. திம்மராயக் கவுண்டர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டறம்பள்ளியை துணை தாலுக்காவாக மாற்றும் யோசனை அரசுக்குண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) நாட்டறம்பள்ளியை துணை தாலுக்காவாக மாற்றும் யோசனை அரசிடம் இல்லை.

(இ) இவ்வினு எழ இடமில்லை.

திரு. ஜி. ராமசாமி: தலைவரவர்களே, பல ஆண்டுகளுக்கு முன்னுல் மாவட்டங்கள், வட்டங்கள் பிரிக்கப்பட்டன. இப்போது மக்கள் தொகை கூடியிருக்கிறது. வருமானமும் அதிகரித்திருக்கிறது. திருப்பத்தூர் வட்டம் மிகப் பெரிய வட்டமாக இருப்பதால் நாட்டறம்பள்ளியை ஒரு துணைவட்டமாக அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாவட்ட ஆட்சித் தலைவர் இப்போது தேவை இல்லை என்ற குறிப்பை அனுப்பி இருக்கிருர்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் இப்போது இல்லை என்று சொன்னுலும் வடாற்காடு மாவட்டம் பெரிய மாவட்டம். ஆகையால் அதை இரண்டாகப் பிரித்து, திருவண்ணுமலை மாவட்டம் என்று ஒரு தனி மாவட்டம் அமைக்கப்படுவதாகப் பேசப்படுகிறது. அது உண்மையா?